# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 111/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | PW-1(LW1) | நாள் | 06.09.2024 |
| பெயர் | சித்ரா | ஜாதி | |
| கணவர் பெயர் | ரவி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 49 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் திருநாள்கொண்டவாச்சி காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். தற்போது காரைக்கால் வரிச்சிக்குடியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். என் கணவர் ரேசன் கடையில் எடையாளராக பணிபுரிந்து வருகிறார். எங்களுக்கு 2 மகன்கள், 2 மகள்கள். மூத்த மகள் பெயர் சிவரஞ்சனி அவர் அரியலூர் holy ஏஞ்சல் கல்லூரில் M.B. A இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் நெடுமாறன். அவரால்தான் என் மகள் தற்கொலை செய்து கொண்டார். என் மகள் இறப்பதற்கு 2 வருடத்திற்கு முன்பு மாப்பிள்ளை பார்த்தோம். என் மகள் நாங்கள் பார்க்கும் மாப்பிள்ளைகளை பிடிக்கவில்லை என்று தட்டிகழித்தார். உள்ளூரை சேர்ந்த நெடுமாறனைதான் காதலிப்பதாகவும், அவரை தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொன்னார். நான் அந்த பையனுக்கு வேலை இல்லை. சாராயம் விற்கிறான். நீ M.B.A படித்து இருக்கிறாய், உனக்கு அந்த பையன் வேண்டாம் என்று எவ்வளவோ சொன்னோம். நான் வாழ்ந்தால் அந்த பையனோடுதான் வாழ்வேன் என்று என் மகள் பிடிவாதமாக இருந்தாள். என் மகளை தெருவில் உள்ளவர்கள் எதிரி நெடுமாறன் தெருவில் போகும்போது உன் புருஷன் போகிறான் என்று சகஜமாக பேச ஆரம்பித்தார்கள். என் மகள் வேண்டாம் என்றால் எதாவது செய்து கொள்வாள் என்று பயந்து நான் நெடுமாறனுக்கு திருமணம் செய்து கொடுக்கலாம் என்று முடிவிற்கு வந்தேன்.

நெடுமாறன் எங்கள் வீட்டிற்கு வந்து என் மகளுடன் பேசுவார். நான் நெடுமாறன் வீட்டிற்கு போய் என் மகளும், உங்கள் மகனும் விரும்புகிறார்கள் ஊருக்கே தெரிந்துவிட்டது என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு நெடுமாறனும், அவரது அம்மாவும் எனது மூத்த மகன் சக்திவேலுக்கு திருமணம் ஆன பிறகு உங்கள் மகளை என் நெடுமாறனுக்கு திருமணம் செய்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். என் மகள் இறப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு ஏப்ரல் மாதத்தில் எதிரி டிராக்டரில் மணல் திருடிய குற்றத்திற்காக ஜெயிலுக்கு போய்விட்டார். ஜெயிலில் ஒரு மாதம் இருந்தார். ஜெயிலுக்கு போய் வந்த பிறகு தன்னுடன் சரியாக பேசவில்லை என்று என் மகள் சொன்னாள். நான் ஜெயிலுக்கு போய்வந்த மனஉளைச்சலில் இருப்பான். கொஞ்சநாள் இரு. கண்டுக்கொள்ளாதே என்று ஆறுதல் சொன்னேன். என் மகள் எப்போது பார்த்தாலும், சாப்பிடாமல் அழுது கொண்டு இருப்பாள். நான் ஏன் இப்படி இருக்கிறாய் சாப்பிடு என்று சொல்லிவிட்டு வயல் வேலை போய்விடுவேன். 11.06.2020 அன்று காலை 09.30 மணியளவில் நான் வயலுக்கு வேலைக்கு போய்விட்டேன். வீட்டில் யாரும் இல்லை. சின்னபையன் ரகுராம் வீட்டில் தூங்கி கொண்டிருந்தான். சாயங்காலம் 04.30 மணியளவில் என் மகன் நான் வேலை பார்த்து கொண்டிருக்கும் வயலுக்கு தபதப என்று ஓடிவந்தான். அக்கா மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தி கொண்டாள். ஓடிவாங்கள் என்று சொன்னான். நான் விழுந்த அடித்து சேற்றில் ஓடிவந்தேன். அக்கா நெருப்பு வைத்து கொண்டது நெடுமாறன் வீட்டுக்குள் இருந்தார். பயமாக இருக்கு ஓடி வா என்று சொன்னான். நான் வீட்டிற்கு வந்து வாசலில் என் மகளை இப்படி செய்து விட்டிர்களே என்று அழுதுபுரண்டேன். நெடுமாறனும், அவரது அம்மாவும் ஆட்டோவில் ஏற்றி மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து போனார்கள். நான் எனது மகனின் இரண்டு சக்கர வாகனத்தில் ஏறி பின்னாடியே போனேன். அங்கு சிசிச்சை அளித்து கும்பகோணம் திருவிடைமருதூர் பிள்ளையாம்பட்டியில் உள்ள மெட்ரோ மருத்துவமனைக்கு நெடுமாறன் மற்றும் அவரது அம்மா அழைத்து போனார்கள். நானும் போனேன். அங்கு என் மகளுக்கு முதலுதவி செய்தார்கள். 11ம் தேதி 04.00 மணிக்கு அந்த மருத்துவமனைக்கு அழைத்து போனார்கள். அங்கு 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு 17.06.2020 அன்று மாலை 06.10 மணிக்கு என் மகள் இறந்துவிட்டார். என் மகளிடம் ஏன் இந்த முடிவு எடுத்தாய் என்று அவள் மருத்துவமனையில் சேர்ந்து மூன்று நாள்

கழித்து கேட்டேன். அதற்கு அவள் நெடுமாறன் தன்னை திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டதாகவும், வேறு யாரையாவது திருமணம் செய்து கொள் எங்கள் வீட்டில் உன்னை திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கவில்லை என்று சொல்லி மனஉளைச்சல் ஏற்படுத்தியதாகவும், தன்னை ஊரில் அப்படி பேச வைத்துவிட்டு திருமணம் செய்து கொள்ள மறுத்ததால் இதுபோல் செய்து கொண்டதாக சொன்னாள். என் மகள் சொன்னதை என் மகன் ரகுராமன் செல்லில் ரெக்கார்ட் செய்தான். என் மகள் இறந்தபிறகு 18 ம் தேதி பெரம்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும். செல்லில் பதிவு செய்ததை கேசட்டில் போட்டு காவல் நிலையத்திற்கு கொடுத்தேன். போலிசில் புகார் கொடுத்தபோது அந்த கேசட்டை கொடுத்தேன். அதில் இன்னும் 2 கேசட் போட்டு நான் வைத்து கொண்டேன். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார். மேற்படி சி.டி யை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.